## August 8, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இந்தியா-அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை நடைபெற்றுவரும் சூழலில், இந்தியா மீதான இறக்குமதி வரியை இரு மடங்காக உயர்த்தி (50%), அதிபர் டிரம்ப் அறிவிப்பை வெளியிட்டார்.

   **பாதிப்புக்குள்ளாகும் ஏற்றுமதி துறைகள்**: ஜவுளி, ஆடைகள், தோல் பொருட்கள் மற்றும் காலணி, ரசாயனம், மின்னணு மற்றும் இயந்திரங்கள், ஆபரணங்கள், இறால் ஆகிய துறைகள் அமெரிக்க வரி விதிப்பால் கடும் பாதிப்பை சந்திக்கவுள்ளன.

   **பிற நாடுகள் மீதான அமெரிக்க வரி**: பிரேஸில் (50%), மியான்மர் (40%), தாய்லாந்து மற்றும் கம்போடியா (தலா 36%), வங்கதேசம் (35%), இந்தோனேசியா (32%), சீனா மற்றும் இலங்கை (தலா 30%)
2. மியான்மர் இடைக்கால அதிபர் மியின்ட் ஸ்வே மரணமடைந்தார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங் சான் சூகி தலைமையிலான அரசை கடந்த 2021 பிப்ரவரி

   1-ஆம் தேதி கவிழ்த்துவிட்டு ஆட்சியை ராணுவம் கைப்பற்றியதற்குப் பிறகு சர்ச்சைக்குரிய சூழலில் நாட்டின் இடைக்கால அதிபராக அவர் நியமிக்கப்பட்டார்.
3. போலந்தில் நடைபெற்ற 8-ஆவது சர்வதேச வீஸ்லா மேனியக் நினைவு தடகள போட்டியில், ஈட்டி எறிதலில் இந்திய வீராங்கனை அன்னு ராணி சாம்பியன் ஆனார்.
4. உணவுப் பாதுகாப்பில் ஆற்றிய சிறந்த பங்களிப்புக்காக, நைஜீரிய வேளாண் ஆராய்ச்சியாளர் பேராசிரியர் எ.அடன்லேவுக்கு முதலாவது 'எம்.எஸ்.சுவாமிநாதன் உணவு-அமைதி விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டது.
5. உத்தரகண்ட் மாநிலம், உத்தரகாசி மாவட்டத்தில் மேகவெடிப்பால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகள் நீடித்தது.
6. குடியரசு துணைத் தலைவர் தேர்தலுக்கான அறிவிக்கையை தேர்தல் ஆணையம் வெளியிட்டது. இதையடுத்து, வேட்புமனு தாக்கல் நடைமுறை தொடங்கியுள்ளது. குடியரசு துணைத் தலைவர் தேர்தல் செப்.9-ஆம் தேதி நடைபெற உள்ளது.
7. பதவி நீக்கம் செய்யும் பரிந்துரைக்கு எதிரான நீதிபதி யஷ்வந்த் வர்மாவின் மனுவை உச்சநீதிமன்றம் வியாழக்கிழமை தள்ளுபடி செய்தது.
8. 1,500 மெகாவாட் மின்சாரத்தை 5 ஆண்டுகளுக்கு ஆர்டிசி (ரவுண்ட் தி கிளாக்) என்ற அடிப்படையில், 24 மணி நேரமும் வாங்க ஒப்பந்தப்புள்ளி கோரியது மின்சார வாரியம். தமிழகத்தின் தினசரி மின் தேவை சாதாரண நாள்களில் 17,000 மெகா வாட்டாகவும், கோடை காலங்களில் குறைந்தபட்சம் 20,000 மெகாவாட்

டாகவும் உள்ளது. இந்த அளவு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், மின் உற்பத்தியை அதிகரிக்கும் பணியில் மின்வாரியம் ஈடுபட்டு வருகிறது.

9. 16 வயதுக்குள்பட்டவர்கள் வருவாய் ஈட்டும் நோக்கில் யூடியூப் போன்ற தளங்களில் சொந்தமாக சேனல் நடத்தத் தடை என்று ஆஸ்திரேலிய அரசு அறிவித்தது.
10. தமிழகத்துக்கான மாநில அரசின் கல்விக் கொள்கை (பள்ளிக் கல்வி) அறிக்கையை தமிழக முதல்வர் ஆகஸ்ட் 8, 2025 அன்று வெளியிடவுள்ளார். **முக்கிய அம்சங்கள்** - தமிழகத்தில் இருமொழிக் கொள் கையே தொடர வேண்டும். கல்வியை மாநிலப் பட்டிய லுக்கு மாற்றுதல், கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு நுழைவுத் தேர்வு நடத்தக்கூடாது என்பன உள்பட பல்வேறு பரிந்துரைகள் இடம் பெற்றுள்ளன.
11. **செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள் :-**
    i. கோகோ கௌஃப் - அமெரிக்க டென்னிஸ் வீரர்
    ii. பிரேசில் அதிபர் - லுலா டா சில்வா
    iii. மெக்கார்ட்னி கெஸ்லர் - அமெரிக்க டென்னிஸ் வீரர்